NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 26 June 2026

# இரவில் படுக்கையறைகளின் சராசரி வெப்பநிலை 28 டிகிரி செல்சியஸ்: ஆய்வு

குளிரூட்டும் சாதனங்களை அதிகம் சார்ந்திருக்கும் மக்கள் வசிக்கும் நாடாக சிங்கப்பூர் கருதப்படுகிறது. அப்படியிருக்கையில் இரவில் படுக்கையறைகளின் சராசரி வெப்பநிலை கிட்டத்தட்ட 28 டிகிரி செல்சியசாக இருந்துவருகிறது என்ற தகவல் வியப்பூட்டும் ஒன்றாகப் பார்க்கப்படுகிறது.

150 குடியிருப்பாளர்களைக் கொண்டு முதன்முறையாக நடத்தப்பட்ட இந்த ஆய்வில் இந்த விவரம் தெரியவந்துள்ளது.

இரவு வேளைகளில் படுக்கையறைகளின் வெப்பநிலை 28.4 டிகிரி செல்சியசாக இருப்பது தெரியவந்துள்ளது. இந்த வெப்பநிலை, தரமான உறக்கத்துக்குத் தேவையானதைவிட அதிகமானதாகும்.

## சிங்கப்பூரின் சராசரி வெப்பநிலை

ஓராண்டுக்கு சிங்கப்பூரின் சராசரி வெப்பநிலை 28 டிகிரி செல்சியசாக இருந்துவருகிறது.

பொதுவாக நல்ல உறக்கத்துக்குத் தேவையான வெப்பநிலை 20 டிகிரி செல்சியசுக்கு மேல் அதிகம் இருக்கக்கூடாது என்கின்றனர் வல்லுநர்கள் சிலர்.



கிரியேட் வல்லுநர் மாநாட்டில் பங்கேற்ற தேசிய ஆய்வு அறநிறுவனத்தின் தலைவர் ஹெங் சுவீ கியட் (முன்னால், வலது).
**படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

## ஹீட்ஸ் ஆய்வு

2050ஆம் ஆண்டுக்குள் சிங்கப்பூரில் ஆண்டுதோறும் குறைந்தது 317 நாள்களில் இரவுநேர வெப்பநிலை 26.3 டிகிரி செல்சியசாக இருக்கும் என்று தேசிய பருவநிலை மாற்ற ஆய்வு ஒன்றில் தெரியவந்தது.

அதனைத் தொடர்ந்து சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகம், பெர்க்லியில் உள்ள கலிஃபோர்னியா பல்கலைக்கழகம், சிட்னி பல்கலைக்கழகம் அகியவற்றைச் சேர்ந்த ஆய்வாளர்கள் ஹீட்ஸ் என்றழைக்கப்படும் மூவாண்டு ஆய்வை மேற்கொண்டனர். தேசிய ஆய்வு அறநிறுவனத்தின் 'கிரியேட்' திட்டம் அதற்கு நிதியுதவி அளித்தது.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.